யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, மார்ச் - 2016

# Term Examination, March - 2016

| தரம் :- 12 (2017) | தமிழ் | நேரம் :- 3.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ பகுதி I இல் உள்ள மூன்று வினாக்களுக்கும், பகுதி II இல் உள்ளவற்றில் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி – I

1) பின்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

i) கருங்கால் வேம்பி னொண்பூ யாணர்
என்னை யின்றியுங் கழிவது கொல்லோ
ஆற்றய லெழுந்த வெண் கோட்டதவத்
தெழு குளிறு மிதித்த ஒரு பழம் போல
குழையக் கொடியோர் நாவே
காதலரகலக் கல்லென் றவ்வே

அ) இச் செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.

ஆ) தலைவனை எண்ணிய தலைவியின் பிரிவாற்றாமைத் துயர் இச்செய்யுளில் புலப்படுமாற்றின் சிறப்பை எடுத்துக்காட்டி விளக்குக.

இ) செய்யுளில் இடம் பெற்றுள்ள முதல் கரு உரிப்பொருள் என்பனவற்றை எடுத்துக்காட்டுக.

(10 புள்ளிகள்)

ii) தா இல் மாமணிக்கலன் மற்றும் தனித்தனி சிதறி
நாவி மென்குழல் நானிலம் தைவரப் பரப்பி
காவி உண்ட கண் அஞ்சனம் கன்றிடக் கலுழா
பூ உதிர்ந்தது ஓர் கொம் பெனப் புவிமிசை, புரண்டாள்
தவ்வி வீழ்ந்தென நாடக மயில் துயின்றென்ன
கவ்வை கடந்தரச் சானகி ஆம் கடிகமழ் கமலத்து
அவ்வை நீங்கும் என்று அயோத்தி வந்து அடைந்த அம்மடந்தை
தவ்வை ஆம் என கிடத்தாள் கேகயன் தனையை

அ) இச் செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.

ஆ) இச் செய்யுள் இடம்பெற்ற சந்தர்ப்பத்தினை விளக்குக.

இ) இச் செய்யுளில் இடம்பெறும் உவமை மற்றும் அணிகள் இருப்பின் எடுத்துக்காட்டுக.

(10 புள்ளிகள்)

2) பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிவு செய்து 300 - 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

அ) கருத்துச் சுதந்திரமும் ஊடகங்களும்

ஆ) சிறுவர் உரிமைகளும் பாதுகாப்பும்

இ) தமிழ்த் தொலைக்காட்சி நாடகங்களில் யதார்த்தமும் கற்பனையும்

ஈ) வாசிப்பு மனிதனைப் பூரணப்படுத்துகின்றது

உ) தோல்வியில் கலங்கேல்

(20 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner

3) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1) பின்வருவனவற்றுள் கூட்டெழுத்துக்களாக அமையும் எழுத்துக்கள்

1) இ, உ
2) அ, இ
3) ஐ, ஔ
4) இ, ஐ
5) அ, ஔ

2) மூக்கொலி இடம்பெறும் சொல்

1) சாய்வு
2) பஞ்சு
3) கற்பு
4) பட்டு
5) விறகு

3) "ஔவையார்" என்ற சொல்லில் அமைந்துள்ள மாத்திரைகளின் எண்ணிக்கை

1) 3
2) $5\frac{1}{2}$
3) $6\frac{1}{2}$
4) 5
5) 4

4) இன எழுத்துக்கள் இல்லாத தனியினம்

1) மெல்லினம்
2) உயிரினம்
3) வல்லினம்
4) மானினம்
5) இடையினம்

5) சொல்லின் முதலிலும் இறுதியிலும் வினாவாகி வரும் எழுத்து

1) யா
2) ஏ
3) ஓ
4) ஆ
5) எ

6) உயிரளபெடையாக அமைந்த சொல்

1) தெய்வம் தொழா அள்
2) ஐயர்
3) கலைஞர்
4) இலங்ங்கு வெண்பிறை
5) மகளிர்

7) ஆறு பகுபத உறுப்புகள் அமைந்த சொல்

1) நடந்தனன்
2) படிக்கிறான்
3) ஓடியது
4) கண்டான்
5) செய்கிறார்கள்

8) வேற்றுநிலை மெய்ம்மயக்கச் சொல்

1) பழம்
2) விட்டம்
3) கற்கள்
4) விழிப்பு
5) வெல்லம்

9) பின்வருவனவற்றில் மரூஉ ஆக அமைந்த சொல்

1) முன்றில்
2) நல்ல பாம்பு
3) அருமந்த
4) சொல்விளம்பி
5) இல்முன்

10) மாதவிப் பெண் மயிலாள் தோகை விரித்தாள். இச் சொற்றொடரில் பெண் மயிலாளாள் என்பது

1) உவமைத்தொகை
2) வேற்றுமைத்தொகை
3) அன்மொழித்தொகை
4) பண்புத்தொகை
5) வினைத்தொகை

(10 x 2 =20 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner

## பகுதி II – "அ"

4, 5, 6 இல் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடை தருக.

4) திருக்குறளில் அமைச்சு என்ற அதிகாரத்தை அடிப்படையாகக்கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

அ) அமைச்சரது குணத்தன்மை

ஆ) அமைச்சரது சிறப்புச் செயல்

இ) அமைச்சருள் கைவிடப்படுவாரது குற்றம்

(20 புள்ளிகள்)

5) கைகேயி சூழ்வினைப் படலத்தில் மன்னன் கைகேயியின் காலில் விழுந்தது முதல், அவள் கூறிய கடுஞ் சொற்களைக் கேட்டு கலங்கியது வரையுள்ள பகுதியில்.

அ) தசரதன் கைகேயியின் காலில் விழுந்து இரந்து கேட்டவை

ஆ) அதற்கு கைகேயி கூறியவை

இ) கம்பரால் கையாளப்பட்ட அணிகள் என்பனவற்றைத் தெளிவுபடுத்துக.

(20 புள்ளிகள்)

6) அ) "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற புறநானூற்றுப் பாடலில் புலவரின் பரந்த நோக்கு கருத்துக்களை எடுத்துக்காட்டி விளக்குக.

ஆ) பெரியாழ்வார் திருமொழி 'நீராடல்' பகுதியில் கண்ணனை நீராட்ட அழைக்க பெரியாழ்வார் கையாண்ட உத்திகளை எழுதுக.

இ) சிலப்பதிகாரம் துன்பமாலையின் மூலம் கோவலனைக் காணாது கலங்கிய கண்ணகி ஐயையிடம் வினாவியவற்றை எழுதுக.

(20 புள்ளிகள்)

agaram.lk

## பகுதி II – "ஆ"

7, 8 ல் ஏதேனும் ஒரு வினாவுக்கு விடை தருக.

7) அ) சங்கம் மருவிய கால இலக்கியங்களை வகைப்படுத்துக.

ஆ) சங்கம் மருவிய காலத்தில் அறநூல்கள் பெருந்தொகையாக எழுந்தமைக்கான காரணங்களை விளக்குக.

(20 புள்ளிகள்)

8) அ) ஆரியச்சக்கரவர்த்திகள் கால இலக்கியங்களை வகையீடு செய்க.

ஆ) ஆரியச்சக்கரவர்த்திகள் கால இலக்கியங்களின் பண்புகளை விளக்குக.

(20 புள்ளிகள்)



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
## Term Examination, March - 2016

FWC

| தமிழ் | புள்ளித்திட்டம் | தரம் :- 12 (2017) |
|---|---|---|

### பகுதி - I

1) அ) கரிய அடிமரத்தை உடைய வேம்பினது அழகிய மலர்களின் புதுவரவானது என்னுடைய தலைவன் இல்லாமையால் பயனின்றிக் கழிந்து போவதோ? என் தலைவன் என்னை விட்டு அகன்றமையால் அயலாராகிய பெண்களின் கொடுமையான வார்த்தைகளைப் பேசும் நாக்குகள் ஆற்றங்கரையில் வளர்ந்துள்ள வெண்மையான கொம்புகளையுடைய அத்திமரத்தினது பழத்தை உண்ண விரும்பிய ஏழு நண்டுகளால் மிதிக்கப்பட்ட ஒரு பழமானது குழைந்து போவது போல நான் வருந்தும்படி, எறிகல் போன்ற சொற்களால் பழிகூறித் தாக்குகின்றன.

ஆ) பிரிந்து சென்ற தலைவன், வருவேனென்று கூறிச் சென்ற உரிய காலத்தில் வராமையால் ஊரவர் தலைவி மீது பழிதூற்றுவதும் அதனால் தலைவியடைந்த தாங்கொணாத் துன்பமும் இச்செய்யுளினூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

வேப்பமரம் பூக்கத் தொடங்கும் இனிய இளவேனிற் காலத்தில் தலைவனும் தலைவியும் பூக்களைச் சூடி மகிழ்ந்திருப்பர். ஆனால் வேப்பமரம் பூத்திருக்கும் இந்த இளவேனிற் காலத்தில் தலைவன் வருவதாகக் கூறிச் சென்றும் வரவில்லை. இந்த பிரிவுத்துயருடன் தலைவன் வராததால் ஊரவர்களின் பழிச்சொல்லுக்கும் தலைவி ஆளாகி இரட்டைத்துயரை அனுபவிக்கின்றாள். அவள் படும் இப்பெரும் பிரிவுத்துயரை அவள் கூற்றாகவே புலவர் பொருத்தமான உவமையணிகளைக் கையாண்டு புலப்படுத்தியுள்ளார்.

பல நண்டுகளால் மிதித்து சிதைக்கப்படும் அத்திபழம் தலைவியின் பெரும் துயருக்கு உவமை கூறப்பட்டுள்ளது. ஊரவரின் பழிச்சொற்களுக்கு எறிகற்கள் உவமை கூறப்பட்டுள்ளன. இவ்வாறு பொருத்தமான உவமையணிகள் மூலம் தலைவியின் பிரிவுத்துயர் சிறப்பாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. (உவமான உவமேயங்கள் விளக்கப்பட்டிருக்கலாம்)

இ) முதல் - முல்லை நிலம், வேனிற்காலம்
கரு - தலைவி, ஊரவர், வேம்பு, பூ, அத்திமரம், அத்திப்பழம், ஆறு
உரி - இருத்தல் (பிரிவை ஆற்றிக்கொண்டு இருத்தல்)

(10 புள்ளிகள்)

ii) அ) கைகேயி குற்றமற்ற இரத்தின மயமான அணிகலன்களைத் தனித்தனியே வீசி எறிந்தாள். கஸ்தூரி பூசிய தன் மெல்லிய கூந்தலைப் பூமியில் படும்படியாக விரித்து விட்டாள். கருங்குவளை மலர் போன்ற தனது மையுண்ட கண்களில் பூசியிருந்த மையானது கரைந்தொழுகும்படி அழலானாள். பூக்கள் உதிர்ந்த ஒரு மலர்க்கொம்பானது தரையில் வீழ்ந்து கிடப்பது போல நிலத்தில் விழுந்து புரண்டாள்.

மேலும் கேகயன் மகள் கைகேயி பெண்மான் ஒன்று தரையில் வீழ்ந்து கிடப்பது போலவும் தோகை விரித்து மகிழ்ந்தாடிய மயில் ஒன்று தன்னாடல் விடுத்து விழுந்து ஒடுங்கிக் கிடந்தாற் போலவும், செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமியாம் சீதாபிராட்டி அயோத்தி நகரை விட்டு கானகம் செல்லப் போகிறாள் என்பதை அறிந்து அவ்விடத்தில் புகுவதற்கு அத்திருமகளின் மூத்தவளான மூதேவி வந்து கிடந்தாற் போலவும் நிலத்தில் வீழ்ந்து கிடந்தாள்.



agaram.lk
Scanned with CamScanner

ஆ) மந்தரையின் சொற்கேட்டு மனம்மாறிய கைகேயி தன் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள (தன்மகன் பரதனுக்கு முடிசூட்டல் நடாத்துவதற்காக) அந்தப்புரம் நாடி வரவிருக்கும் தன் கணவன் தசரதனின் மனதை மாற்றும் பொருட்டு தன் கோலங்களைக் கலைத்து நிலத்தில் கூந்தல் பரப்பிக் கிடந்த சந்தர்ப்பத்தில் பாடப்பட்டது.

இ) உவமையணிகள்

i) நீலோற்பவ மலர் போன்ற கண்கள்

ii) பூக்கள் உதிர்ந்த கொம்பு தரையில் கிடந்தது போல

iii) பெண் மான் ஒன்று கீழே வீழ்ந்து கிடந்தாற் போல

iv) தோகை விரித்தாடும் மயில் ஆடல் விடுத்து ஒடுங்கிக் கிடப்பது போலவும்

v) மூதேவி வந்து கிடந்ததைப் போல

மேற்கூறியவை கைகேயிக்கு உவமைகளாயின.

தற்குறிப்பேற்ற அணி :-

திருமகள் அயோத்தியை விட்டு நீங்குவாளென கருதிய மூதேவி வந்து சேர்ந்தது போல என்பது தற்குறிப்பேற்ற அணி. (கம்பர் சீதையைத் திருமகளெனவும் கைகேயியை மூதேவியெனவும் கருதி சீதை வெளியேறினால் அயோத்தியில் செல்வச் சிறப்பு இல்லை எனவும் அந்நாட்டில் மூதேவியே குடிகொள்ளும் என்ற தனது கருத்தை அயோத்தியில் எதிர்நிகழவிருக்கும் சம்பவங்களில் ஏற்றிக் கூறியுள்ளார்.

(10 புள்ளிகள்)

2) கட்டுரை

| | |
|---|---|
| பொருள் (விடயம்) | 10 புள்ளிகள் |
| அளவும் அமையும் | 06 புள்ளிகள் |
| மொழிநடை | 04 புள்ளிகள் |
| | 20 புள்ளிகள் |

agaram.lk

3) அ)

1) - 3 - ஐ ஔ

2) - 2 - பஞ்சு

3) - 3 - $6\frac{1}{2}$

4) - 5 - இடையினம்

5) - 2 - ஏ

6) - 1 - தெய்வம் தொழாஅள்

7) - 1 - நடந்தனன்

8) - 3 - கற்கள்

9) - 3 - அருமந்த

10) - 3 - அன்மொழித்தொகை

(2X10 = 20 புள்ளிகள்)



Scanned with CamScanner

## பகுதி II – "அ"

4) அ) அமைச்சரது குணத்தன்மை

1 – 5 குறள்களால் அமைச்சரது குணத்தன்மை கூறப்பட்டது.

i) ஒரு காரியத்தைச் செய்ய நினைக்கும் போது அதற்கு வேண்டிய கருவிகளும், அதற்கு ஏற்ற காலமும், செய்யும் வகையும், செய்யப்படும் பொருத்தமான செயலும் பொருந்தச் செயற்படுபவன் நல்ல அமைச்சன்.

ii) அஞ்சாமை, உறுதி, குடிமக்களுக்கு தீமைவராது பாதுகாத்தல், நூலறிவோடு நுண்ணறிவும் பெற்றிருத்தல், முயற்சி உடையவனாயிருத்தல்.

iii) தக்க காலத்தில் பகைவருக்குத் துணையாயிருப்பவரை பிரித்தலும், தம்மிடம் உள்ளவரைக் காத்தலும், பிரிந்தவரை மீண்டும் சேர்த்துக் கொள்ளலும்.

iv) ஒரு செயலைச் செய்யமுன் பல துறைகளிலும் ஆராய்ந்து முடிவு செய்தல் செய்வதை உறுதிப்படச் செய்தல்.

v) அரச நீதிகளை நன்கு அறிந்து அறிவோடு, அமைதியோடு அரசர்க்கு உண்மைகளை எடுத்துச் சொல்லக் கூடியவன்.

ஆ) குறள் - 6 அமைச்சரின் சிறப்பு கூறுகின்றது.

இயற்கை அறிவாகிய நுண்ணறிவோடு செயற்கையான நூலறிவும் பெற்று அமைச்சன் கூர்மையாளனாகத் திகழ வேண்டும். நூலறிவு கற்றவரிடமே உண்டு. அதனைத் தக்கபடி பயன்படுத்துவதோடு சுயமாக சிந்தித்து கூறுபவனாக இருத்தல்

இ) 9, 10 குறள்களால் அமைச்சருள் கைவிடப்பட வேண்டியவரது குற்றம் கூறப்படுகின்றது. அரசன் பக்கத்தே இருந்து தவறான வழிமுறைகளைச் சிந்தித்துச் செயற்படும் அமைச்சன் ஒருவன், எழுபது கோடி பகைவர்கள் இருப்பதிலும் பார்க்க கொடுமை தரும் ஒன்றாகும். ஒரு செயலைச் செய்து முடிக்கும் திறமை இல்லாதவன் அச்செயல்களை முறையாக எண்ணித் திட்டமிடப்பட்டிருந்தாலும், செய்யும்போது முற்றுப் பெறாதனவாகவே செய்வான்.

(20 புள்ளிகள்)

5) அ) 30, 31, 32, 33, 36, 37 ஆம் பாடல்களை ஆதாரம்காட்டி விளக்கப்பட்டிருத்தல்

கொள்ளா னின் சேய் ……. என்ற பாடல் மூலம் இராமனுக்கு முடிசூடி இந்த உலகமே பாராட்டிப் பேசும் புகழை விடுத்து பரதனை முடிசூடச் செய்து எல்லோரும் இகழ்ந்து பேசும் பழிச்சொல்லுக்கு ஆளாகாதே என்று இரந்து வேண்டுகின்றான்.

வானோர் கொள்ளார் … என்ற பாடல் மூலம் இராமனே தானாக முன்வந்து ஆட்சிப் பொறுப்பைக் கொடுப்பான். ஆகவே இராமனைக் காட்டுக்கு அனுப்ப வேண்டாம் என்று இரங்குகின்றான்.

கண்ணே வேண்டும் … என்ற பாடல் மூலம் என் கண்களையும் உயிரையும் வேண்டுமானாலும் உனக்குத் தருவேன். ஆனால் இராமனைக் காட்டுக்கு அனுப்புவதை மறந்துவிடு என்று இரங்குகின்றான்.

வாய் தந்தேன் என்றேன்.. என்ற பாடல் மூலம் பேய்கூட இரங்கும் இராமனுக்குத் தாயாகிய நீ இரங்க மாட்டாயா? என்று வேண்டுகின்றான்.

நின் மகனாவான் … என்ற பாடல் மூலம் என் கண்ணாகவும் உயிராகவும் விளங்கும் இராமனைக் காட்டுக்கு அனுப்பாதே என்று இரந்து கேட்கின்றான்.

மெய்யே என்றன் … என்ற பாடல் மூலம் என் மகன் என்னை விட்டுப் பிரிவானேல் நான் உயிர் வாழ மாட்டேன். இப்போது என் உயிர் உன்னிடமே தஞ்சம் என்று இரந்து வேண்டுகின்றான்

ஆ) 34, 38 ஆம் பாடல்களை ஆதாரங்காட்டி விளக்குதல் -

அரசர்களுக்கும் அரசனான தசரதச் சக்கரவர்த்தி கைகேயியின் காலில் விழுந்து இரந்து கேட்டவற்றைக் கேட்ட கைகேயி தனது மனநிலையில் ஒரு சிறிதும் மாற்றமில்லாதவளாக முன்னே தந்தாய் இவ்வரம் நல்காய் … என்றும் தந்த வரதத்தைத் தவிர்க்க என்று கூறுதல் வலியே அல்லாமல் நல்ல தருமமாமோ என்று வினவி, தனது கொடூரமான சிந்தையை வெளிப்படுத்துகின்றாள்.

agaram.lk



Scanned with CamScanner

இ) இப்பகுதியில் கம்பனால் கையாளப்பட்டுள்ள அணிகள் மிகவும் பொருத்தப்பாடு உடையனவாகக் காணப்படுகின்றன.

i) தாய் தந்தென்ன, தன்னை இரந்தால் தழல் வெங்கண் பேயும் தந்தீயும் ... தன்னை இரப்பவருக்கு நெருப்புப்போல செவ்விய கண்களையுடைய பேயும் தாய் போல ஈயும். நீ இதனைக் கொடுத்தால் அது தவறாகுமா?
இப்பகுதியில் உவமையணி கையாளப்பட்டுள்ளது. இங்கு இராமனைக் காட்டுக்கு அனுப்பும்படி கேட்ட வரத்தை மறுக்கும்படி தசரதன் கைகேயியை வேண்டுவது தாய் பேயை இரந்து தன் குழந்தையைக் கேட்பது போன்றதாகும் என்றவாறு உவமை கையாளப்பட்டுள்ளது.

ii) நச்சுத்தீயே பெண்உரு அன்றோ? – கைகேயியை விஷமும் நெருப்பும் போன்ற ஒரு பெண் உரு என்று அவளை மிகவும் வெறுத்துக் கூறுகிறான். இதனை உவமையணியாகவும் உருவகமாகவும் கொள்ளலாம். நச்சுத்தீயே பெண் உருக்கொண்டது. (கைகேயியாக)

(20 புள்ளிகள்)

6) அ) i) எந்த ஊரும் எமக்குச் சொந்தமான ஊரே

ii) எல்லோரும் எமது உறவினர்களே

iii) நமக்கு நிகழும் நன்மை தீமைகள் பிறரால் வருவதில்லை; நம்மால் நமக்கு வருபவை.

iv) துன்பம் வருவதும் நீங்குவதும், இன்பம் வருவதும் நீங்குவதும் உலகின் இயல்பான செயல்.

v) இறத்தல் புதியதல்ல, இயல்பானது. மனிதன் தோன்றிய காலம் முதல் மரணம் தொடர்ந்தே வருகின்றது.
அதுபோல வாழ்வு இனிமை என்று அதிகம் மகிழ்வதும் இல்லை.
வாழ்வு துன்பமானது என ஏங்குவதும் இல்லை.
பெரியோரைப் பெரிதும் புகழவும் மாட்டோம். அவரிலும் சிறியோரை இகழவும் மாட்டோம்

agaram.lk

ஆ) கண்ணனை நீராட்ட அழைக்க பெரியாழ்வார் கையாண்ட உத்திகள்
கண்டிப்புடன் கூறி அழைத்தல்.
காரணம் காட்டி அழைத்தல்.
ஆசை காட்டி அழைத்தல்.
ஆவலூட்டி அழைத்தல்.
நப்பின்னை எனும் கண்ணன் விரும்பும் தேவியருள் ஒருத்தி பெயரை உபயோகித்து அழைத்தல்
ஒப்பந்தம் செய்து அழைத்தல்.

இ) காதலனைக் காணவில்லை
என் கலக்கம் கை மீறிச் செல்கிறது.
துருத்தியின் வெப்பத்தைத் தோற்றுவிக்கும் வண்ணம் நெஞ்சம் துடிக்கிறது.
நண்பகல் பொழுதில் என்னை நடுங்கச் செய்யும் துன்பம் கைமீறிச் செல்கின்றது.
அன்பனைக் காணாது ஏன் நெஞ்சம் கலங்குகிறது.
என் தலைவன் இன்னும் வரவில்லை எனக்கு யார்தான் அடைக்கலமாக உள்ளார்கள்.
ஏதோ வஞ்சகச் செயல் நடந்திருக்கிறது.
அதனால் என் நெஞ்சம் கலங்குகிறது.

(20 புள்ளிகள்)



Scanned with CamScanner

பகுதி – II "ஆ"

7) i) சங்கமருவிய கால இலக்கியங்களை வகைப்படுத்தல்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

1. திருக்குறள்
2. நாலடியார் } அறம் பொருள் இன்பம் உரைப்பவை

3. நான்மணிக்கடிகை
4. இன்னா நாற்பது
5. இனியவை நாற்பது
6. பழமொழி நானூறு
7. முதுமொழிக்காஞ்சி
8. திரிகடுகம்
9. ஏலாதி
10. சிறுபஞ்சமூலம்
11. ஆசாரக்கோவை } அறம் மட்டும் உரைப்பவை

12. ஐந்திணை ஐம்பது
13. ஐந்திணை எழுபது
14. திணைமொழி ஐம்பது
15. திணைமாலை நூற்றைம்பது
16. கைந்நிலை
17. கார்நாற்பது } அகம் சார்ந்தவை

18. களவழி நாற்பது → புறம் சார்ந்தது

ii) காவியங்கள் - இரட்டைக் காப்பியங்கள்

i) சிலப்பதிகாரம்

ii) மணிமேகலை

agaram.lk

iii) பக்திசார் நூல்கள்

அ) காரைக்கால் அம்மையார் பாடியவை

i) அற்புத திருவந்தாதி

ii) திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்

iii) திருவிரட்டை மணிமாலை

ஆ) திருமூலர் பாடியது – திருமந்திரம்

இ) முதல் மூவாழ்வார்கள் பாடியவை :-

i) பொய்கையாழ்வார் பாடியது – 1 ஆம் திருவந்தாதி

ii) பூதத்தாழ்வார் பாடியது – 2 ஆம் திருவந்தாதி

iii) பேயாழ்வார் பாடியது – 3 ஆம் திருவந்தாதி

iv) இலக்கண நூல்

தொல்காப்பியம்

(இந்நூலின் காலம் பற்றிய சர்ச்சை இருந்தாலும் பெரும்பாலும் இது சங்கம் மருவிய காலத்தது என்றே கொள்ளப்படுகின்றது.)



Scanned with CamScanner

ஆ) சங்கம் மருவிய காலத்தில் அறநூல்கள் பெருமளவில் எழுந்தமைக்கான காரணங்கள் :-

i) சங்ககால கட்டுப்பாடற்ற அதீத இன்பநுகர்ச்சி

அடுத்தடுத்த தொடர்ச்சியான போர்களினால் மக்கள் மனங்களில் விளைந்த விரக்தி மனநிலை, சலிப்புத்தன்மை என்பவற்றால் புதிய வாழ்வை நாடியமை

சமண, பௌத்த மதங்களினது கோட்பாடுகளின் செல்வாக்கு அதிகரித்தமை

வட இந்திய ஆரியர் செல்வாக்கு தமிழ்நாட்டில் அதிகரித்தமை

அரசு, சமூகம், வணிகம் போன்ற கட்டமைப்புக்கள் தோன்றியமையினால் அவற்றிற்கான நெறிமுறைகளை உரைக்க வேண்டிய தேவை இருந்தமை

அந்நியராட்சி முதலிய காரணிகளால் நிகழ்ந்த சமூகச் சீர்கேடுகளில் இருந்து சமூகத்தை மீட்க ஒழுக்கப்போதனை அவசியமானமை

(20 புள்ளிகள்)

8) அ) ஆரியச்சக்கரவர்த்திகள் கால இலக்கியங்கள் வகைபீடு

| நூல் | வகை | |
|---|---|---|
| 1. சரசோதிமாலை<br>2. செகராசசேகரமாலை | சோதிட நூல்கள் | அறிவியற் சார்புடையவை |
| 3. செகராச சேகரம்<br>4. பரராச சேகரம் | வைத்திய நூல்கள் | |
| 5. வையா பாடல்<br>6. கைலாயமாலை<br>7. கோணேசர் கல்வெட்டு | வரலாற்று நூல்கள் | |
| 8. தஷ்ண கைலாசபுராணம்<br>9. திருக்கரைசைபுராணம் | தலபுராணங்கள் | |
| 10. மொழிபெயர்ப்பு - இரகுவம்சம் | | |
| 11. கதிரை மலைப்பள்ளு<br>12. கண்ணகி வழக்குரை | பொது மக்கள் சார்பு இலக்கியங்கள் | |

ஆ) ஆரியச் சக்கரவர்த்திகள் கால இலக்கியப் பண்புகளை விளக்கல்

1. வரலாற்றுணர்வு
2. சமயச்சார்பு
3. வைத்தியம்
4. தலபுராண மரபு – (வடமொழி தழுவியதும் உள்ளூர் சார்ந்ததும்)
5. சாதாரண மக்கள் வாழ்க்கை இலக்கியங்களில் இடம்பெற்றமை
6. நாட்டார் இலக்கிய முறைமையின் செல்வாக்கு – கதிரைமலைப்பள்ளு
7. வித்துவச் சிறப்பு காணப்பட்டமை - இரகுவம்சம்
8. மொழிபெயர்ப்பு முயற்சி - இரகுவம்சம்
9. இலக்கியங்களில் தேசிய உணர்வைப் பாய்ச்சும் முயற்சி காணப்பட்டமை –

தஷ்சண கைலாச புராணம் கதிரைமலைப்பள்ளு

(20 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner